DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

STC-114/2025

Prosecution witness – PW 2

| | | |
|---|---|---|
| Name | : திரு.கருமுத்துராமநாதன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)

09.03.2026 – 01.15 PM

முதல் விசாரணை:-

1. நான் கடலாடியில் குடியிருந்து ஹோட்டல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கடையில் வேலை பார்த்து கொண்டிருக்கிறார். அ.சா.1 யை தெரியும். பட்டியல் சாட்சி 3 யை எனக்கு தெரியும்.

2. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: -**

01.05.2025 ந் தேதி மதியம் 12.00 மணியளவில் கோபாலகிருஷ்ணன் சமையல் மாஸ்டரான சேதுபதியுடன் வேலை செய்து கொண்டிருந்த போது தவறுதலாக தேங்காய் துருவலை வேறு ஒரு குழம்பில் அ.சா.1 போட்டுவிட்டார் என்று சேதுபதி ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், கையால் வலது கண்ணத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டார் என்றும், அ.சா.1 தடுமாறி விழுந்த போது பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது என்றும் அதற்கு கடலாடி அரசு மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்

என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எனது கடையில் வேலை பார்க்கிறார்  என்பதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.09 18:50:49 +0530